*09 May 2010 01:27:24 AM IST*

# கணினிப் பயிற்சி தொடக்கம்

செங்கல்பட்டு, மே 8: செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லத்தில் படிப்பகம் மற்றும் கணினிப் பயிற்சி தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது.

÷இந்தியா சுடர் கல்வி அறக்கட்டளை மற்றும் செங்கல்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் இணைந்து நடத்திய இவ் விழாவில் காஞ்சிபுரம் மாவட்ட காவல்துறை கூடுதல் துணை கண்காணிப்பாளர் எம்.குணசேகரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். படிப்பகம் மற்றும் கணினிப் பயிற்சியை அவர் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அரசினர் சிறப்பு இல்ல கண்காணிப்பாளர் எஸ்.தனசேகரபாண்டியன் தலைமை தாங்கினார். இந்தியா சுடர் கல்வி அறக்கட்டளை நிறுவனர் வி.உதயகுமார் முன்னிலை வகித்தார்.

© Copyright 2008 Dinamani